சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்த பொருத்தமான சூழமைவை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பொறுப்பு அரசியல் கட்சிகளுக்கும் தலைவர்களும் உள்ளதென நாங்கள் நம்புகிறோம். தேர்தல்கள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தேர்தல் கடமைகளில் ஈடுபடும் தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தத்தமது கடமைகளை பக்கச்சார்பின்றியும் வினைத்திறனாகவும் நிறைவேற்றத் தேவையான பூரண ஒத்துழைப்பை அரசியல் கட்சிகளும் தலைவர்களும் வழங்குவதாக நடைமுறையில் காண்பித்தால் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கான சூழமைவைக் கட்டியெழுப்ப முடியும்.

அது அவ்வாறு இருக்க, நடந்து முடிந்த சில தேர்தல்கள் தொடர்பான ப∴வ்ரல் அமைப்பின் கண்காணிப்பின் படி சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவதற்குப் பொருத்தமான சூழமைவு காணப்பட்டதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. குறிப்பாக அண்மைக்காலத்தில் நாட்டில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின்போது விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் ஒரே அரசியல் நீரோட்ட கட்சிகளிடையே விருப்பு வாக்குகளைப் பெறுவதில் மோதல்கள் ஏற்படுவதற்கான தீவிர போக்கு காணப்பட்டமை இதனை உறுதிசெய்வதாக உள்ளது.

எனவே, இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையை அடிப்படையாகக்கொண்டு நடாத்தப்படுவதால், உங்கள் அரசியல் கட்சியானது தேர்தல் செயற்பாட்டில் கடைப்பிடிக்கும் அடிப்படைக் கொள்கைச்சட்டகம் யாதென்பது பற்றி மக்களையும் குறிப்பாக உங்கள் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களையும் விழிப்புணர்வு செய்தல் அத்துடன் அக்கொள்கையானது நாட்டில் வலுவிலுள்ள சட்டம், தேர்தல் சட்டம் மற்றும் ஒழுங்கை மீறும் வேட்பாளர்கள் தொடர்பாக கட்சியென்ற வகையில் மேற்கொள்ளும் ஒழுக்காற்று விசாரணையை அறிவித்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் ஏனைய சிறு அரசியல் கட்சிகளும் அதனை முன்னுதாரணமாகக் கொள்வதுடன் அது உங்கள் அரசியல் கட்சி மீதான மக்களின் பற்றையும் அதிகரிக்கவும் ஏதுவாக அமையும்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செயற்பாடுகளின் அநேகமான பிரசார நடவடிக்கைகள் கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்படுவதால், அது அந்தப் பிரதேச சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் பொலித்தீன் போன்ற உக்காத பொருட்களை குறைந்தளவில் உபயோகித்து சூழல்நேய மிக்க பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க உங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

ஆகவே, நாட்டில் வலுவிலுள்ள சட்டம், தேர்தல் சட்டத்திற்கு இயைந்தொழுகி தங்களுடைய தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்தத் தேவையான சூழமைவை உருவாக்குவதற்கு வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குமாறு உங்களிடமும் உங்களின் கட்சிகளிடமும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு உண்மையுள்ள

**றோஹன ஹெட்டிஆராச்சி**

நிறைவேற்றுப் **பணிப்பாளர்.**